# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**MCOP.No.** 36/2022

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.கலைவாணி **RW1** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 4th day of September 2024.

**முதல் விசாரணை**

நான் அம்பாசமுத்திரம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு மோட்டார் வாகன ஆய்வாளர் வழங்கிய அங்கீகாரத்தை தாக்கல் செய்கிறேன். அது **எ.ம.சா.ஆ 1** ஆகும். அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் சுபாஷ், த/பெ.மாணிக்கவாசகம், 2/342 மேல மாதாபுரம், கீழக் கடையம், தென்காசி மாவட்டம் என்ற நபருக்கு 09.03.2019 ல் இருசக்கர வாகனம் மற்றும் இலகுரக வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் வழங்கப்பட்டுள்ளது. விபத்து தேதியான 09.03.2019 அன்று கனரக வாகனம் ஓட்டுவதற்கு மேற்படி நபருக்கு ஓட்டுநர் உரிமம் ஊர்ஜிதத்தில் இல்லை. மேற்படி நபருக்கு கனரக வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் இல்லை

என தெரிவித்தும் அவருக்கு வழுங்கப்பட்டிருந்து இருசக்கர வாகனம் மற்றும் இலகுரக வாகனம் ஓட்டுநர் உரிமத்தின் விபரங்கள் அடங்கிய அறிக்கையை தாக்கல் செய்கிறேன். அது **எ.ம.சா. ஆ 2** வரிசையாகும். இந்த விபத்தில் சம்பந்தப்பட்ட TN 43 B 3893 வாகனத்தின் மோட்டார வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கை மற்றும் TN 76 AX 5820 வாகனத்தின் மோட்டா வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கையை தாக்கல் செய்கிறேன். அவை முறையே **எ.ம.சா.ஆ 3 மற்றும் 4** ஆகும்.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

TN 43 B 3893 பதிவெண் கொண்ட வாகனம் இலகுரக சரக்கு வாகனம் என்றால் சரிதான். அந்த வாகனத்தை ஓட்டுவதற்கு மேற்படி நபருக்கு முறையான உரிமம் இல்லை என சோதனை அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அதுபற்றி நான் ஆய்வு செய்யவில்லை. மோட்டார் வாகன அறிக்கையில் முறையான உரிமம் இல்லை என குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

S MANOJKUMAR

Digitally signed by S MANOJKUMAR